சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 1242 / 2022**

வா.சா.1. நாச்சிமுத்து 03.04.2025

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

இந்த வழக்கை நான் தாக்கல் செய்யவில்லை. எனது தாயார் தாக்கல் செய்தார். அதனால் வழக்கு தாக்கல் செய்த தேதி எனக்கு தெரியாது. எந்த வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றும் எனக்கு தெரியாது. வழக்கு சொத்துகள் குறித்த விபரம் பற்றி எனக்கு தெரியும். 1-ம் இலக்க சொத்து எனது தாயார் அவரது கிரையம் பெற்ற சொத்தை எனக்கு கிரையத்தின் அடிப்படையில் எனக்கு கிடைக்கப்பெற்றது. தாவா 2-ம் இலக்க சொத்து எனக்கு பூர்விகத்தின் அடிப்படையில் கிடைக்கப்பெற்றது. 19.04.2022-ம் தேதி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களை அளவீடு செய்வதற்கு நில அளவையர் எனக்கு அறிவிப்பு கொடுத்த பின்பு நான் வேண்டுமென்றே அந்த அளவீடு செய்யக்கூடாது என்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தை எனக்கு கண்பார்வை குறைவால் என்னால் படிக்க முடியாது. 22.04.2022 மற்றும் 23.04.2022-ம் தேதி நிலங்களை அளவீடு செய்ய போவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு அளிக்கவும் எனக்கு 09.04.2022ம் தேத அறிவிப்பு கொடுத்தார் என்றும் அந்த அறிவிப்பை பெற்றுக் கொண்டு அந்த நிலவை நடவடிக்கையை தடை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த அறிவிப்புக்கு முன்னிட்டும் தாவா 2-ம் இலக்க சொத்தை அளவீடு செய்வதற்கு நான் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. தாவா 2-ம் இலக்க சொத்தை பொறுத்து பிரதிவாதியின் முன்பு இருந்த உரிமையாளருக்கும் எனக்கும் பிரச்சனை இல்லை. இந்த பிரதிவாதியுடன் மட்டும் தான் பிரச்சனை. பங்காளி பெருமாள் மகன் சாமியப்பன் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் உயர்நீதிமன்ற உத்தரவு எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எனது பங்காளி பெருமாள் மகன் சாமியப்பன் தாவா 2-ம் இலக்க சொத்தை அளவீடு செய்வதற்கு நான் இடையூறு செய்கிறார் என்று குறிப்பிட்டு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து அந்த மனு அனுமதிக்கப்பட்டு அதை அளவீடு செய்ய உத்தரவிடப்பட்டும் நான் அதற்கு இடையூறு செய்த காரணத்தினால் அம்பிளிக்கை காவல் நிலையத்தில் எனக்கு எதிராக புகார்கொடுக்கப்பட்டு அந்த புகார் விசாரணை நிலையில் இருந்து வருகிறது என்றால் அந்த வழக்கு பொய் வழக்கு. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள ஆவணங்கள் குறித்த விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2 பாதை பாத்திய பத்திரம் நடைபெற்ற தேதியல் அந்த ஒரு பத்திரம் தான் அன்று ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. மற்றொரு

பாகப்பிரிவினை பத்திரமும் எழுதிக் கொள்ளப்பட்டது. எனது பங்காளிகளுக்குள் எழுதப்பட்டதா என்றால் சரியல்ல. அந்த பாகபிரிவினை பத்திரம் சரியா, தவறா என்றால் சரிதான். அந்த பாகபிரிவினை பத்திரத்தை நான் எனது தரப்பு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி கிரையம் பெற்ற பத்திரத்தை நான் எனது தரப்பு ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு கிரையம் பெற்ற கிரைய பத்திரத்திற்கான மூலஆவணமாக எங்களது பாகபிரிவினை பத்திரத்தை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எங்கள் உரிமைக்காக தான் அந்த பாகபிரிவினை பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதியின் கிரைய ஆவணத்திற்கும் பாகபிரிவினை பத்திரத்திற்கும் இடைபட்ட காலங்களில் பாகப்பிரிவினை இலக்க சொத்துக்களை பொறுத்து கிரையமோ, தானம், ஈடு போன்ற வகையில் ஏற்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. இந்த 2ம் இலக்க சொத்தை கிரையம் வாங்கிய திருமலைச்சாமிக்கும் எனக்கும் பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. திருமலைச்சாமி எனக்கு உறவினர் அல்ல. திருமலைச்சாமி 2-ம் இலக்க சொத்தை கிரையம் பெற்றதற்கு பிறகு தாவா 2-ம் இலக்க சொத்தில் அனுபவம் செய்யவில்லை என்றால் சரிதான். அவர் சொத்திற்கு உள்ளேயே வரவில்லை. இந்த பிரதிவாதி அந்த திருமலைசாமயியிடம் தாவா 2-ம் இலக்கசொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அரசமரத்துபட்டியை சேர்ந்த திருமலைச்சாமி பெருமாள் வகையறாவிடம் இருந்து 2019-ம் ஆண்டு வாங்கிய கிரைய பத்திரமும் போலியானது, திருமலைச்சாமியிடமிருந்து இந்த பிரதிவாதி தாவா 2-ம் இலக்க சொத்தை பொறுத்து கிரையம் பெற்ற பத்திரமும் போலியானது. பாகப்பிரிவினையில் செய்து கொண்ட பெருமாள் வகையறா யார் என்றால் போலியம்மனூரை சேர்ந்தவர்கள். அந்த பெருமாள் வகையறா எனக்கு பங்காளி உறவுமுறை என்றால் சரியல்ல. (பிரதிவாதி தரப்பில் 2011-ம் ஆண்டு பாகப்பரீவினை பத்திரம் குறித்து பிரமாண பத்தரிக்கையில் குறிப்பிட்டும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்தும் கேள்வி எழுப்பட்டது. வாதி தரப்பில் அது குறித்து எதிர்வழக்குரையில் குறிப்பிடப்படாததால் சாட்சியிடம் கேள்வி எழுப்ப கூடாது என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. பிரமாண பத்திரிக்கையிலும் அந்த ஆவணம் குறித்து சொல்லப்பட்டுள்ளதாலும் அந்த ஆவணம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதாலும் பிரதிவாதி தரப்பில் கேள்வி எழுப்ப அனுமதி வழங்கப்பட்டது.) கடந்த 2011-ம் ஆண்டில் நாச்சிமுத்துகவுடர் ஆகிய நான், மற்றும் சண்முகவேல் மற்றும் மைனர் மகன்கள் மற்றும் பங்காளி வகையறாக்களான கருப்பணகவுடரின் மகன் பெருமாள், பெருமாள் கவுடர் மகன்கள் சாமியப்பன், கருப்பணன், பாண்டியராஜ், ஜெயராமன் மற்றும் 9 நபர்களுடன் சோந்து பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான் ஆனால் அந்த பாகபிரிவினை மூல ஆவணம் இல்லாமல் செய்துகொண்டதால் அது தவறானவை. இந்த பாகபிரிவினை

பத்திரத்தை சார்பதிவளர் அவர்களிடம் சமர்ப்பித்து யார் என்றால் ஆவண எழுத்தர் தான் சமர்ப்பித்தார். ஒரு ஆவணம் எழுதப்பட்டு யார் அந்த ஆவணத்தை ஆவண பதிவுக்காக சார்பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கிறார்களோ அவர்கள் புகைப்படம் தான் ஆவணத்தில் ஒட்டப்படும் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பாக பிரிவினை ஆவணத்தில் ஒட்டப்பட்ட புகைப்படம் என்னுடையது தான். அந்த பாகபிரிவினை பத்திரம் தான் நாங்கள் செய்து கொண்ட பாகபிரிவினை பத்திரம் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.1. பாகப்பிரிவினையில் கண்ட சொத்து எங்களது பூர்விக சொத்து என்றால் பூர்விக சொத்துக்களும் உண்டு எனது தந்தை கிரையம் வாங்கிய சொத்துக்களும் உண்டு. அந்த விபரம் பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது. பாகப்பிரிவினையில் உள்ள சொத்துக்கும் எனது தாயார் கிரையம் பெற்ற சொத்தும் அருகாமை அருகாமையில் இருந்ததால் அந்த சொத்திற்கு போய் வர ஏதுவாக இருக்கும் என்பதால் எனது தாயார் பாதை பாத்திய உடன்படிக்கையில் தரப்பினராக சேர்க்கப்பட்டு இருந்தார் என்றால் சரிதான். 2011ம் ஆண்டு செய்து கொண்ட பாகபிரிவினையில் பெருமாள்கவுடருக்கு கிடைக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து பெருமாள் வகையறா 2015ம் ஆண்டு அந்த சொத்துக்களை பாகபிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2015-ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டு அந்த பாகப்பிரிவினையில் கட்டுப்பட்ட சொத்துக்களை அளவீடு செய்யும் பொழுது நான் பிரச்சனை செய்தேன் என்றால் சரிதான். அப்போது அவர்கள் பாதையை ஆக்கிரமிப்பு செய்ததால் நான் தடுத்தேன். 2016-ம் ஆண்டு இதுகுறித்து சாமியப்பன் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏனென்றால் எனக்கு அதில் அழைப்பாணை சார்பு ஆகவில்லை.

(சாட்சியிடம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் திருமலைசாமியின் சொந்த ஊர் எது என்று கேட்டபோது நீ ஆவணம் வைத்துள்ளாய் அல்லவா அதை பார்த்து சொல்லுங்கள் என்று சொன்னதன் பேரில் இன்று குறுக்கு விசாரணையை ஒத்தி வைத்துக் கொள்வதாக பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் சொன்னதன் பேரில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2025.04.04 10:32:51 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்